# வெற்றிமணி

சிறுவர் மாத இதழ்

மலர் 6 இதழ் 10



15-2-69 சதம் 30

நங்கையர் விரும்பும் நவநாகரீக

★ நகைகளுக்கும் ★ வைரங்களுக்கும்

புகழ்பெற்று விளங்கும் ஸ்தாபனம்

# கே.என்.எம்.மீரான் சாஹிப்

''தங்கப்பவுண் நகை மாளிகை''

கன்னாதிட்டி தொலைபேசி: 585 யாழ்ப்பாணம்

*Visit*

## K. N. M. MEERAN SAHIB

JEWELLERS & DIAMOND MERCHANT

"SOVEREIGN PALACE"

**KANNATHIDDY** *Dial*: 585 **JAFFNA**



## வாய்வு சூரணம்

மலச்சிக்கல், மலக்கட்டு, உஷ்ண பித்த வாய்வுகள், கை கால் இடுப்பு மூட்டுகள் வலி பிடிப்பு-வயிற்று வலிக்குச் சிறந்தது. (பத்தியமில்லை)

150 கிராம் டின் ரூபா. 4-00

(தேவைக்கு எழுதவும்)

## வீரகேசரி மாத்திரை

ஜீவசக்தி கனவிலும், சிறுநீரிலும் வெளியாவதை கட்டுப்படுத்தி நாடி நரம்புகளுக்கு வலுவும் உறுப்புக்கு உறுதியும் இழந்த சக்தியும் நீடித்த சக்தியும் அளிக்கும்

100 பில்ஸ் ரூ. 25; 50—ரூ. 13, 24—ரூ. 7. (மெழுகு ரூ. 4)

(பார்சல் சார்சு தனி)

**பண்டிட்: S. V. R. கண்டர் சன்ஸ் R. I. M. P.**

அரிசிப்பாளையம், சேலம் - 9. (S. I.)

கிடைக்குமிடங்கள்:-

(1) ஆத்மஜோதி நிலையம், நாவலப்பிட்டி, சிலோன் (2) அமிர்தலால் அன் கோ. (மெடிக்கல் ஸ்ரோர்ஸ்) 146, நைனியப்ப நாயக்கன் தெரு, சென்னை- 3. (3) ராஜா மெடிக்கல், 31, தர்மராஜா கோவில் தெரு, பெங்களூர் கண்ட். (4) வல்லராம் 188 A, தாராவிரோடு, பம்பாய்-17



கௌரவ ஆசிரியர்: மு. க. சுப்பிரமணியம்

# வெற்றிமணி

## வருடச் சந்தா

பொங்கல் மலர்
தபாற்செலவுட்பட

| | | |
|---|---|---|
| இலங்கை | ரூபா. | 4-00 |
| இந்தியா | ரூபா. | 4-00 |
| மலாயா | $ | 4-00 |

★

## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| வெளி அட்டை | ரூபா. | 50-00 |
| உள் அட்டை | ரூபா. | 35-00 |
| முதற் பக்கம் | ரூபா. | 30-00 |
| உட் பக்கம் | ரூபா. | 20-00 |

தொடர்ந்து விளம்பரஞ்செய்யின்
15 வீதக் கழிவுண்டு
விபரங்களுக்கு எழுதுக.

## பொருளடக்கம்


தலையங்கம் ... ... ... ... 3
அண்ணா நீ போயினையோ! ... 4
அறிஞர் அண்ணா! ... ... ... 5
வையத்துயர்ந்தது யாழ்ப்பாணம் 6
அறிவுப் போட்டி 6ன் முடிவுகள் 8
மனிதனும் காலநிலையும் ... 9
கணக்கியலுக்கோர் அறிமுகம் 11
நாடகம் ... ... ... ... ... 13
தன்னிகரில்லாத் தாவரங்கள் 19
பல முதன்மைகள் ... ... ... 21
காலந்தவருமை ... ... 22
வாழ்வு சிறக்க! ... ... ... 23
போதுமென்ற மனமே பொன்செய்யும் மருந்து ... 25
தைப் பொங்கல் ... ... ... 28
செல்வத்துட் செல்வம் கல்விச் செல்வம் ... 29
மாணவர் மன்ற, பேனா நண்பர் சங்க விபரங்கள் 32

— வெற்றிமணி —

வெற்றிமணி டாண் எனவே விண்முட்ட ஒலித்திடுவாய்
நற்றமிழாம் எங்கள்மொழி நலமுற ஒலித்திடுவாய்

| மலர் 6. | சனிக்கிழமை 15-2-69 | இதழ் 10 |
| --- | --- | --- |

# அறிஞர் அண்ணா

தமிழையே தன் பேச்சாகவும் மூச்சாகவுங்கொண்ட செம்மல், தமிழர் வாழ்வும் வளமும் தழைத்தோங்க அல்லும் பகலும் அயராது உழைத்த அண்ணல், திராவிடர் நாகரிகம் திசையெலாம் பரவும்வகை செய்வேன் என்று உறுதிகொண்ட நெஞ்சன், ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற குறிக்கோளுடன் தமிழர் வளர்ச்சியைத் தடை செய்துகொண்டிருந்த சாதி மலையைத் தகர்த்தெறிந்த புரட்சி வீரன், 'மக்கள் குரலே மகேசன் குரல்' என்று நம்பிக் கடவுளை ஏழைகளிடத்திற் கண்டு களித்த தொண்டன், எண்ணற்ற ஏழைகளின் கண்ணீரைப் போக்க இடையறுதுழைத்த ஏழை பங்காளன், எங்களுக்கும் காலம் வரும் காலம் வந்தால் வாழ்வு வரும் என்று நம்பியிருந்து அந்தக் காலத்தையே எட்டிப் பிடித்துவிட்ட ஏந்தல், சிங்கத் தமிழ்மொழியின் செழிப்பை—தங்கத் தமிழ்மொழியின் சிறப்பைத் தனது தன்னேரில்லா ஆற்றலால்-வாக்கு வளத்தால் கேளாரும் வேட்ப மொழிந்து ஊமையராய்ச் செவிடர்களாய் நாமமது தமிழரெனக் கொண்டிங்கு வாழ்ந்தோர்க்கெல்லாம் உயிர்கொடுத்து உணர்ச்சியூட்டித் தலை நிமிரச் செய்த மானத் தமிழன், படித்தவர்களையும் பாமரர்களையும், ஏழைகளையும் பணக்காரர்களையும், இளைஞரையும் முதியோரையும், கழகத்தாரையும் எதிர்க்கட்சியினரையும் தனது அறிவொளியால் நாளும் கவர்ந்து கொண்டேயிருந்த கலங்கரை விளக்கம், சிறந்த மதிநுட்பமுடையவர், அஃகி அகன்ற அறிவுடைச் சான்றோர், உயர்ந்த பண்பாளர், தலைசிறந்த பேச்சாளர், பழுத்த அரசியல்வாதி என்றெல்லாம் யாவரும் புகழ்ந்தேத்தும் ஒப்பில்லாத் தமிழர் தலைவன் அறிஞர் திரு. காஞ்சிபுரம் நடராசன் அண்ணாத்துரை அவர்கள் இன்று எம்மத்தியில் இல்லையென எண்ணும் பொழுது நெஞ்சம் ஒடுங்காதவர்கள், சிந்தை குலையாதவர்கள், கண்கள் கலங்காதவர்கள், கதறிப் புலம்பாதவர்கள் இருக்க முடியாது.

அவர் பணிகள் தொடர்ந்து நடைபெற, அவர் கனவுகள் நினைவாகி நிலைபெற எல்லாம் வல்ல இறைவனை இறைஞ்சுவோமாக!

# அண்ணு நீ போயினையோ !

அண்ணுநீ போயினையோ
அந்தோ ஐயோ
மண்ணுளும் பொறுப்பொன்றை
மக்கள் ஈந்தும்

விண்ணுளச் சென்றதுமேன்
வேந்தே நின்றன்
கண்ணுன தமிழ்நாடு
கலங்கி எல்லாம்

மண்ணேயென் றிடிவீழ்ந்து
மயங்கிக் கெட்டு
உண்ணுதாய் உறங்காதாய்
உருக்கு லைந்து

கண்ணீர்மா வெள்ளத்தில்
கரைந்து நின்பின்
விண்ணேறிப் புகுமுன்னர்
விரைந்தே வாராய்!

முன்பென்றுங் காணுத
மூச்சே ஆன்ற
மூளைத்தி றன்மிக்க
முதல்வா நின்றன்

அன்புக்கும் அறிவுக்கும்
அண்டிக் கேட்கும்
பண்பற்ற பகைதானும்
பான்மை கெட்டு

என்பெற்ருேம் என்பெற்ருேம்
என்றே யார்த்து
உன்மத்தம் மிகப்பெற்றே
உறுதி பூண்டு

நின்பக்கம் சேர்கின்ற
நிகரில் லாத
மின்சத்திப் பொழிவுக்கும்
வேறிங் காரோ?

கவிஞர் வி. கந்தவனம்

# அறிஞர் அண்ணா!

{ சாரதா }

1. அன்னிய ராட்சி யாலும்,
அகத்தினுட் பகைக ளாலும்
தன்னினப் பண்பை விட்டே,
தரணியில் தாழ்ந்து கெட்ட
தென்னகத் தாரை யெல்லாந்
திரட்டியோ ரியக்க மாக்கி,
முன்னடத் திச்செல் வீர
மூச்சென முனைந்து நின்றோன்;

2. கண்ணியங் கட்டுப் பாடு
கடமையென் றின்ன மூன்றும்
உண்மைமந் திரமாய்க் கொண்டு
உழைத்தவன்; தமிழ் நாட்டின்பேர்
மன்னிட மாற்றஞ் செய்து
வஞ்சரை மடக்கி வைத்தோன்;
பின்னரும் பல செய்தற்குப்
பெரும்பெருந் திட்ட மிட்டோன்;

3. மதிநலம், ஆக்க சக்தி,
வசீகரப் பேச் செழுத்து,
புதுநடை, மேட்டூர் வெள்ளப்
பொலிவுறு சொல் லடுக்கு,
அதிசயக் கருத் தடக்கம்,
அணைந்தெழு நகையுஞ் சேர்ந்து
சதிரிடத் தன தெண்ணங்கள்
சாதனை செய்த தீரன்!

4. தாரணி யெங்கு முள்ள
தமிழினத் தாரை யெல்லாம்
ஓரணி யாக்க வல்ல
உயர் பெரும்வீர அண்ணா!
சார்வுறு மிடரை யெல்லாம்
தகர்த்தி சமர்த்தாய் நாட்டைச்
சூருடன் வழி நடத்துஞ்
சொல்லரும் புகழ்க் கட்டத்தில்;

5. புற்றுநோய்ச் சாட்டில் வந்து
புகுந்தது சனியன் போலும்!
சற்றுமே எதிர்பார்க் காத
சங்கதி நடந்து போச்சு;
அற்புத மறு மலர்ச்சி
அறிஞரின் ஆவி போச்சு!
கொட்டினைச் சமாதி யிட்டே
கூவிநாங் குலைகின் றோமே!

# வையத் துயர்ந்தது யாழ்ப்பாணம்

இரசிகமணி கனக. செந்திநாதன்

எங்கள் நாட்டுப் புலவர்கள் ஈழத்தை வர்ணிக்கும் போது மிகப் பெருமிதத்துடன் சிவனொளிபாத மலையையும் கதிரைமலையையும் மகாவலி கங்கையையும் மாணிக்க கங்கையையும் வாயூற மனங்குளிரப் பாடுகிறார்கள். மலை முகட்டிலுள்ள மாளிகைகளையும் குன்றுகளில் உள்ள தோட்டங்களையும் வர்ணிக்கிறார்கள். ''துஞ்சுமேதி சுருக்களைச் சீறச் சுருக்களோடிப் பலாக்கனி கீறி இஞ்சி வேலியின் மஞ்சளிற் போய்விழும் ஈழ மண்டல நாடெங்கள் நாடே!'' என இறும்பூதெய்தும் சின்னத்தம்பிப் புலவரின் பாடலுக்கு நிகர் தான் யாது? என இரசிகர்கள் வாயூறுகிறார்கள். ஆனால், யாழ்ப்பாணத்தைப்பற்றிப் பாட என்னதான் இருக்கிறது? எனப் பலர் தயங்குகிறார்கள். வெறும் மணல் மேடுகளை வானுயர்ந்த மலைகள் என வர்ணிக்கலாமா? கடலில்இருந்து வெட்டப்பட்ட வெறும் உப்பாறாகிய தொண்டமனாற்றை கழனி கங்கையின் கொழிமணிக் கரைபோல் புழுகலாமா? ''வேற்றுமுகமும் விண்முகமும் தோயுனர்க்கு மாற்று நகுல மலை வான்புனலை'' - கீரிமலையை - எத்தனைதரந்தான் நாவலுக்கப் பாடிக்கொண்டிருப்பது? ஆம்! மலை வளமும் நதி வளமும் இல்லாத யாழ்ப்பாணப் பிரதேசத்தை வர்ணிப்பதில் அவர்கள் வெறும் கற்பனைக் கோட்டைகளைக்கட்ட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு ஆளாகவேண்டியிருக்கிறார்கள்.

சமீபத்தில் வெளியாகியுள்ள ஒரு காவிய நூலில் கவிஞர் ஒருவர் இந்த நிர்ப்பந்த நிலையைச் சிறிது தொட்டுக் காட்டிவிட்டு ''அதனால் என்ன? யாழ்ப்பாணத் தமிழனின் கமத்தொழில் முயற்சிக்கு, கலை ஆர்வத்துக்கு, வாழ்ந்து தான் தீருவோம் என்ற விடாமுயற்சிக்கு ஆறு இல்லாவிட்டால் என்ன! மலை இல்லாவிட்டாலென்ன? இவையெல்லாம் ஒரு பொருட்டா?'' என்று நயம்படக் கேட்கிறார். சந்த அமைப்பில் பொருட் பொலிவோடு கவிதைகள் அமைந்திருக்கின்றன:

''யாழைக் கொணர்ந்திங்கு மீட்டியதால்ஒரு
யாசகன் மன்னனிடம் இருந்தோர்
பாழைப் பரிசுபெற்றான்'' எனக்கூறிடும்
பண்டைப் பழங்கதை கேட்டதுண்டு
பாழைப் பரிசுபெற்றாலு மப்பாலையை
பச்சைப்படுத்திப் பயன் விளைத்து
வாழத்தொடர்ந்து முயன்றதனால் இன்று
வையத் துயர்ந்தது யாழ்ப்பாணம்!

தமிழ்நாட்டிலிருந்து ஈழம் வந்த குருட்டு யாழ்ப்பாடி கண்டி மன்னனிடம் யாழ்வாசித்துப் பாலைநிலம் போலிருந்த யாழ்ப்பாணமாகிய மணற்றிடரைப் பரிசுபெற்றான் என்பது சரித்திர வரலாறு. ஆனால் வெறும் பாழ்நிலம்தானே இதை என் செய்வது? என்று இன்றைய வாலிபர்கள்போலத் திண்ணை தூங்கிகளாகவா நம் முன்னோர்கள் இருந்தார்கள்? இல்லை. இல்லவேயில்லை. ''அப் பாலையைப் பச்சைப் படுத்திப் பயன் விளைத்துவாழ தொடர்ந்து முயன்றார்கள்'' அம் முயற்சி, கடும் உழைப்பு அவர்களை வையத்தில் உயர வைத்துவிட்டது என்கிறார் கவிஞர் மிகப் பெருமிதத்தோடு. அடுத்த பாடலைப் பாருங்கள். சந்த அமைப்பில்- எங்கள் பெருமையை விண் உயரத் தூக்குகின்றது:

''ஆறு நடந்து திரிந்து வயல்கள்
அடைந்து கதிர்கள் விளைந்திட வான்
ஏறி உயர்ந்த மலைஏதும் இல்லையே
என்ற ஒரு கதை சொல்வதுண்டு
ஏறி உயர்ந்த மலை இல்லை ஆயினும்
என்ன? இருந்தன தோள்கள்!'' என்றே
கூறி உழைத்தபின் ஆறிக் கலைகளில்
ஊறிச் சிறந்தது யாழ்ப்பாணம்!

''ஏறிஉயர்ந்த மலையில்லையாயினும் என்ன?'' தொழிலாளி -விடாமுயற்சிக்காரன்- கேட்கிறான். கேட்டுவிட்டு ''இருந்தன தோள்கள் - மலைஒத்த தோள்கள் - இவை போதாதா உழைப்புக்கு?'' என்று தன் தோள்களையே பார்த்து விம்மிதமுறுகிறான். பின்பு... கவிஞர் மிக அருமையாக முடித்திருக்கிறார். ''கூறி உழைத்தபின் ஆறிக் கலைகளில் ஊறிச் சிறக்கிறான் அவன்.'' யாழ்ப்பாண உழைப்பாளியின் பெரு

மைக்குக் கவிஞர் புதுவிதமாகக் கொடுத்த நற்சாட்சிப் பத்திரம் இப் பாடல்.

கவிஞர் மஹாகவி என்ற உருத்திரமூர்த்தியின் கண் மணியாள் காதை என்ற வில்லுப்பாட்டிலுள்ள கவிதைகள் இவை. வில்லுப்பாட்டில் இவை பாடப்பட்டபொழுது கேட்டுக்கொண்டிருந்த அத்தனைபேர்களும் தத்தம் தோள்களை ஒருமுறை பார்த்துக் கொண்டார்கள். அன்னை வெளியீட்டாரின் இந் நூல் ஈழத்துக் கவிஞர் - மஹாகவியின் - புதுமைப் படைப்பு! நல்ல படைப்பு!!

## அறிவுப்போட்டி இல. 6
### சரியான விடைகள்

1. முதுதமிழ்ப் புலவர் மு. நல்லதம்பி 2. செக்கிழுத்த சிதம்பரனர் 3. ஆனி 21 4. 24 வயது 5. ஏறக்குறைய 34510 அடி 6. வி. எம். நரசிம்மர் 7. காரை செ. சுந்தரம்பிள்ளை 8. புத்தளம், குருநாக்கல், சிலாபம்.

சரியான விடையனுப்பியவர்களுள் பின்வரும் ஐவரும் ரூபா 2 வீதம் பரிசுபெறுகின்றனர்.

1. செல்வி உஷா சண்முகதாசன், கட்டுடை, மானிப்பாய்.
2. து. தேவிதிலகவதி, புத்தூர் கிழக்கு, புத்தூர்.
3. செ. சுதாகர், வேலணை கிழக்கு, வேலணை.
4. இ. சிவலிங்கம், கட்டுவன், தெல்லிப்பழை.
5. நா. கோபாலசிங்கம், துணைவி, வட்டுக்கோட்டை.

**பரிசுபெற்ற நேயர்களுக்கு எமது வாழ்த்துக்கள்**

**15-3-69இல் அறிவுப்போட்டி இல. 7 வெளியிடப்படும்.**

சரியான விடை அனுப்புகிறவர்களின் பெயர்களும், விலாசங்களும் வெளியிடப்படும்.

புவியியல்

# மனிதனும் காலநிலையும்

— மணிலா —

வானிலை என்பது ஒரு குறிப்பிட்ட இடத்தின் குறிப்பிட்ட காலத்தில் ஏற்படும் வானியல் தன்மையாகும். ஆனால், ஒரு குறிப்பிட்ட காலத்தில் ஓரிடத்தில் நாளுக்கு நாள் உண்டாகும் வானிலைத் தன்மைகளின் சராசரியே காலநிலையாகும்.

காலநிலை மனிதனை நேராகவும், மறைமுகமாகவும் பாதிக்கின்றது. சில அறிஞர்களின் கருத்தின்படி காலநிலை மனிதனை நேரடியாகப் பாதிப்பதால் காலநிலை மாறுபாட்டிற்கேற்பவே அவன் குணதிசயங்களும் தோற்றமும் மாறுபடுகின்றன. இடைவெப்பக் காலநிலையுள்ள இடங்கள் அயன மண்டலக் காலநிலையுள்ள இடங்களிலும்பார்க்க மனிதன் வாழ உகந்தவை.

தாவரவகைகளை அழிப்பதன்மூலம் மனிதனை நேரில்லா முறையில் காலநிலை பாதிக்கின்றது. அயன, இடைவெப்பக் காடுகளிடையேயுள்ள வேறுபாட்டிற்கு முக்கியகாரணம் காலநிலையே. மனித குடியிருப்பையும் இயற்கைத் தாவரத்தையும் நோக்குமிடத்து சில தாவரங்களை விரைவாக அழித்து குடியிருப்புகளை ஏற்படுத்துவது முடியாதிருந்தது. உதாரணமாக, அயனப் பகுதிக் காடுகள் அடர்த்தியாயிருப்பதால் அழிப்பது கடினம். அழித்தாலும் இரண்டாவது முறையாகவும் அவை விரைவில் வளர்ந்துவிடுகின்றன.

காலநிலையை அடிப்படையாகக்கொண்டு மண்ணை இரு பிரிவாக்கலாம்: 1. ஈரலிப்பு மண் 2. வறள் மண்.

ஈரலிப்பு மண் உள்ள பகுதிகளில் காடுகளும், வறள் மண் உள்ள இடங்களில் புல்வெளிகளும் காணப்படுகின்றன.

மனிதனின் மிக முக்கிய முயற்சியான விவசாயமும் காலநிலையைப் பொறுத்தது. மழை, வெப்பம் இரண்டும் விவசாயத்தைப் பாதிக்கும். ஓரிடத்தின் வளரும் காலம் நீடிப்பதைச் சார்ந்தே பயிர்கள் பயிரிடப்படும். மழை வீழ்ச்சியில் பயன்படு மழையே முக்கியம். பயன்படு மழை மழை, வெப்பம் என்பவற்றை அறிந்து ஆவியாதல்மூலம்

இழக்கப்படுவதைக்கொண்டே கணிக்கப்படும். மழை நீர் நீராவியாகவும், கழிவு நீராயும், தரைக் கீழ் நீராகவும் செலவாகின்றது.

அல்லாமலும், மந்தைகளின் தீன் விளைவு மழை வீழ்ச்சியில் தங்கியுள்ளதால் மந்தை வளர்ப்பும் காலநிலையாற் பாதிக்கப்படுகின்றது.

நாகரீக உலகில் கைத்தொழில் மிக முக்கியம் வகிக்கின்றது. இதுவும் ஓரளவு காலநிலையின் செல்வாக்கிற்குட்பட்டது. பம்பாய், லங்காஷயர் என்பவற்றில் ஈரவானிலை காரணமாகவே பருத்திக் கைத்தொழில் மையங்கள் காணப்படுகின்றன. மரப் பண்ணைத் தொழிலும் காலநிலையால் நிர்ணயிக்கப்படும். மாரியில் பனியுறைவதால் மரம் வெட்டிப் பின்னர் கோடையில் ஆலைகளுக்கு எடுத்துச் செல்வர். நீர்மின்சக்தியும் மழையுடன் தொடர்புடையது.

மனிதனின் உறைவிடமும் காலநிலைக்கேற்பவே அமைந்துள்ளது. ஆக்டிக்கில் எஸ்கிமோவர் 'இக்ளூ' என்னும் குடிசைகளில் வாழ்வர். பாலைவனத்தில் மழைக் குறைவால் தட்டையான கூரையுடைய வீடுகள் அமைக்கப்படுகின்றன. அயனப் பகுதியில் அல்லாமலும் இடைவெப்பப் பகுதியில் மரத்தாலும் வீடுகள் அமைக்கின்றனர்.

உடைகளும் காலநிலைக்கேற்ப மாற்றமடைகின்றன. பருத்தி, பட்டு, கம்பளி என்பன வெவ்வேறு காலநிலைப் பிரதேசங்களிற் பாவிக்கப்படுகின்றன.

போக்குவரத்தும் காலநிலையால் நிர்ணயிக்கப்படுகின்றது. இது உள்நாட்டுப் போக்குவரத்து, சமுத்திரப் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து என மூன்ருகப் பிரிக்கப்படும். வரட்சி, வெள்ளம் என்பன உள்நாட்டுப் போக்குவரத்தைப் பாதிக்கும். இதனுல் இவற்றை வருடம் முழுதும் பாவிக்க முடிவதில்லை. முனைவில் பனியுறைவதால் போக்குவரத்துத் தடைப்படும். கடலும் வருடம் முழுவதும் வசதியான போக்குவரத்தை யளிப்பதில்லை. பாலைநிலங்களிலும் மோட்டார், புகையிரதப் பாதைகள் அமைப்பது கடினம். ஆகாயப்பாதையும் காலநிலையால் பாதிக்கப்படும்.

ஆனுல், இத்தகைய தடைகள் இருந்தபோதும் மனிதன் இக் காலத்தில் இவற்றை மாற்றியமைத்துள்ளான்.

தொடர்ச்சி:

# கணக்கியலுக்கோர் அறிமுகம் (10)

வை. சி. சிவஞானம்

## 6. வெளித்திரும்பிய சரக்கேடு

சரக்கைப் பெற்றவர்கள் எக்காரணங்களால் ஒரு வியாபாரிக்குத் திருப்பி அனுப்புகிறார்களோ அக்காரணங்களுக்காகக் கொள்முதல் செய்த சரக்கை வியாபாரியும் திருப்பி அனுப்பவேண்டிய நிலைமை ஏற்படும். காசுக் கொள்முதலாக இருந்தால் திருப்பி அனுப்பிய சரக்குக்கு உடன் பணத்தைப் பெறுவதால், இந்நடவடிக்கையின் ஒரு பதிவு காசேட்டில் பதியப்படும். ஆனால் கடன் கொள்முதலில் திருப்பி அனுப்பப்படும் சரக்கின் பெறுமதியைக் காசேட்டில் பதிய முடியாது. அதற்காக வைத்திருக்கும் ஏடே, வெளித்திரும்பிய சரக்கேடு அல்லது திரும்பிச் சென்ற சரக்கேடாகும். குறிப்பிட்ட ஒரு காலமுடிவில் இந்நாளேட்டின் கூட்டுத்தொகை பேரேட்டிலுள்ள வெளித்திரும்பிய சரக்குக் கணக்கிற்கு மாற்றப்படும்.

உதாரணம்:- ஒரு வியாபாரி தை மாதத்தில் திருப்பி அனுப்பிய சரக்கின் நடவடிக்கைகளை வெளித்திரும்பிய சரக்கேட்டில் பதிக?

| | | | | |
|---|---|---|---|---|
| தை | 8 | இராசனுக்கு திருப்பிய சரக்கு | 125-00 | ரூபா |
| ,, | 14 | கோபாலனுக்கு திருப்பிய சரக்கு | 75-00 | ,, |
| ,, | 15 | மணிவண்ணனுக்கு திருப்பி அனுப்பிய கொள் கலன்கள் | 80-00 | ரூபா |
| ,, | 18 | கோபாலனிடம் கொள்முதல் செய்த சரக்கில் அவன் கூடுதலாகப் பதிந்த தொகை | 60-00 | ரூபா |
| ,, | 26 | இராசனுக்கு திருப்பிய சரக்கு | 45-00 | ரூபா |

## வெளித்திரும்பிய சரக்கேடு

| மீ | உ | விபரம் | பே. பக்கம் | தொகை ரூ. | ச. |
|---|---|---|---|---|---|
| தை | 8 | இராசன் | 6 | 125 | 00 |
| ,, | 14 | கோபாலன் | 10 | 75 | 00 |
| ,, | 15 | மணிவண்ணன் | 18 | 80 | 00 |
| ,, | 18 | கோபாலன் | 10 | 60 | 00 |
| ,, | 26 | இராசன் | 6 | 45 | 00 |
| | | வெ. தி. சரக்கு க/கு வரவுக்கு கொ. செ. | | 385 | 00 |

## உண்டியல் ஏடுகள்

உண்டியல் என்பது கடன் கொடுத்தோனுல் பிறப்பிக்கப்பட்டு கடன்பட்டோனுல் ஒப்புக்கொள்ளும் ஒரு பெறுமதியுடைய கை மாறத்தக்க பத்திரமாகும். வியாபார உலகில் இவ்வுண்டியல்கள் பயன்படுத்தப்படுகின்றன. குறிப்பிட்ட தவணையில் அல்லது உடன் பணம் தரும்வண்ணம் கடன் கொடுத்தோன்விடுக்கும் கட்டளையை கடன்பட்டோன் ஒப்புக்கொள்ளும் பத்திரமே உண்டியலாகும். கடன் கொடுத்தோன் உண்டியல் பிறப்பிக்க கடன் பட்டோன் அவ்வுண்டியலை ஒப்புக்கொண்டு கடன் கொடுத்தோனுக்கு அனுப்பிவைக்கிருன்.

i உண்டியல் பிறப்பித்தவன் குறிப்பிட்ட தவணைமுடிவில் பணத்தைப் பெறமுடியும் என்பதை அப்பத்திரம் உணர்த்துகிறது.

ii உண்டியலை ஒப்புக்கொண்டவன் குறிப்பிட்ட தவணையில் பணம் செலுத்தவேண்டிய பொறுப்பு உண்டு என்பதை அப்பத்திரம் உணர்த்துகிறது.

பிறப்பித்தவனுக்கு தவணைமுடிவில் பணம் வருமாகையால் அவனுக்கு அப்பத்திரம் வருமதி உண்டியலாகும். ஒப்புக்கொண்டவன் தவணைமுடிவில் பணம் செலுத்தும் பொறுப்புடையோனுகையால் அவனுக்கு இப்பத்திரம் செல்மதி உண்டியலாகும்.

உண்டியல் பிறப்பிக்கும்பொழுதும், ஒப்புக்கொள்ளும்பொழுதும் பணம் வருவதோ, அன்றி வெளியேறுவதோ நடப்பதில்லையாதலால் காசேட்டில் பதியமுடியாது. எனவே உண்டியல் நடவடிக்கைகளை உடனுக்குடன் ஒழுங்குமுறைப்படி தகுந்த விபரங்களுடன் பதிவதற்கு முதலேடுகள் அல்லது துணையேடுகள் தேவைப்படும் அவை முறையே

i வருமதி உண்டியலேடு

ii செல்மதி உண்டியலேடு

என வழங்கப்படும்.

—தொடரும்


### இலங்கையில் ஏஜண்டு தேவை!

தமிழகத்தில் பல்லாயிரக் கணக்கில் விற்பனையாகும்

— ஒரே ஒரு சிறுவர் மாதமிரு முறை —

★ மத்தாப்பு ★

ஆசிரியர்: மகிழ்ச்சிக்கண்ணன்

மாதிரிப்பிரதிகளுக்கும், விபரங்களுக்கும் தொடர்புகொள்க

**கோபாலர்பண்ணை,**

3 - 31 - ஏ, மேடக்சு தெரு, சென்னை 7, இந்தியா.

# நாடகம்

ஏ. ரி. பொன்னுத்துரை பீ. ஏ.

**வேலு :** ஐயா என்னத்துக்கு டி. ஆர். ஓ. ஒவ்வீசுக்குப் போருரோ? நாடகத்துக்கு லைசென்ஸ் ஏதேனும் எடுக்கப்போருரோ என்னவோ ஆருக்குத் தெரியும்? அவர் நாடகச் சாமானுகளைத் தொடாதை எண்டு சொன்னாலும் என்ரை மனம் அங்கைதான் இழுக்குது. என்ன கிடக்குது எண்டு பாப்பம்.

[ஸ்கிறீனுக்குப் பின்னால் செல்கிருன். மறைந்து விட்டான். சட்டங்களில் அறையப்பட்ட பேய் முகங்களை எடுத்துப் பார்த்து விட்டு உயர்த்தி உயர்த்தி ஆட்டிப்பார்க்கிருன். வாயிலில் வருபவர்களுக்கு ஸ்கிறீனுக்கு மேல் பேய் முகங்கள் ஆடுவதுபோல் தெரிகிறது. அப்போது சுந்தரமும் மூர்த்தியும் நிமிர்ந்த நடையுடன் வீரர்கள் மாதிரி லெப்ற் றைற் போட்டபடி வருகிருர்கள். திடீரென இருவரும் பேய்முகங்களைக் காணகிருர்கள். பயந்து நடுங்குகிருர்கள்]

**சுந்த :** (பயந்தபடி) டேய்! மூர்த்தி! இது மாமா வீடில்லையடா!

**மூர்த் :** அப்போ?

**சுந்த :** பேயள் குடியிருக்கிற வீடாக்குமடா!

**மூர்த் :** (சத்தமிட்டு) ஆ! என்ன பேயா? என்ன பேயா? எங்...கே...டா...?

**சுந்த :** அதோ பாரடா பட்டப்பகலிலை பேய் முகம். அதுகள் நடக்குதடா.

**மூர்த் :** பயமாய்க் கிடக்குதடா!

**சுந்த :** (நடுங்கியபடி) துடையள் கிடுகிடு கிடுகிடு எண்டு அடிக்குதடா.

**மூர்த் :** உடம்பெல்லாம் பதறுதடா. பயமாக் கிடக்கடா.

**சுந்த :** வேர்வை சலம் சலமாய்க் கொட்டுதடா.

**மூர்த் :** நெஞ்செல்லாம் 'படக் படக்' கெண்டு அடிக்குதடா.

**சுந்த :** (பயமிகுதியால்) டேய்!

**மூர்த் :** டேய்!

**இருவ :** ஆ! ஆ!! ஆ!!!

[கத்துகிறுர்கள். பயத்தால் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்துத் தடக்குப்பட்டுக் கதிரையில் வீழ்கிறுர்கள். கண்களை மூடியபடி இருக்கிறுர்கள். வேலு சிரித்தபடி வெளியே வருகிறுன்.]

**வேலு :** ஐயா! ஐயா!! (சத்தமாக) ஐயோ!

**சுந்த :** ஏ! யார்? நீ யார்?

**வேலு :** வேலைக்கார வேலு.

**இருவ :** நாங்கள்தான் வவனியா வட்டாரத்தையே கலக்குக் கலக்கிய விஸ்வநாத விதானையாற்ரை பேரன்மார். எங்களைக் கண்டாலே வவனியா வட்டாரம் கிடு கிடுக்கும்.

**சுந்த :** சரி சரி எங்கை மாமா?

**வேலு :** அவர் வெளியிலை போட்டார். வாற நேரமாச்சு. போய்க் கூட்டிவந்திடட்டோ?

**சுந்த :** (பேயின் பயத்தால்) ஆ! ஆ!! வேண்டாம் வேண்டாம். அவர் வருவர்தானே.

**வேலு :** என்னண்டாலும் உங்களைச் சுணக்குகிறது அவ்வளவு நல்லதல்ல. இப்பவே போய்......

**மூர்தி :** நாங்கள் இஞ்சை தனிய இருக்கிறதா?

**வேலு :** நீங்கதானே பேர்பெற்ற வீரர்கள் ஆச்சே வவனியா வட்டாரத்திலே நாலு நடை நடந்தால் போதாதா? பேய்கள்கூட நடுங்குமே.

[பேய்கள் என்ற சொல்லைக் கேட்டதும் பயந்து நடுங்கி]

**இருவ :** என்ன! பேய்களா? (சுற்றியபடி கதிரையில் வீழ்தல்) ஐயோ! ஆ! ஆ!!

**வேலு :** விஸ்வநாதர் பேரன்மாரே! வீராதி வீரர்களே! எழுந்திருங்களையா. பேய் எண்டு சொல்லமுந்திப் பயந்து மயங்கி விழுந்திட்டியளே.

**மூர்த் :** அதென்னடா அதிலை பேய்மாதிரி...?

**வேலு :** அதைக் கண்டுட்டா பயந்து பதறி விழுந்து எழும்பினியள்.

[சிரிக்கிறான். அடக்கமுடியாமற் சிரிக்கிறான்]

**மூர்த் :** ஏன்ரா சிரிக்கிறாய்?

**வேலு :** ஐயா! அது ஐயாவினுடைய நாடகச் சாமானுகள். வாற வெள்ளிக்கிழமை 'கலிங்கத்துப் பரணி' எண்ட நாடகம் நடத்தப்போறார். அந்த நாடகத்திலை பேய்கள் வாற மாதிரிச் சில காட்சிகள் வருகுது. அதுதான் ஸ்கிரீனுக்குப் பின்னாலை தடியிலை இறுக்கின பேய் முகங்களை ஆட்டி ஆட்டிப் பாத்தனான். நீங்க என்னடா எண்டா அதைக் கண்டிட்டுப் பயந்து பட்டபாடு. மயங்கி விழுந்திட்டியளே. நல்ல வீரந்தான் ஐயா.

**சுந்த :** அப்ப எங்கடை மாமா பெரிய நாடக காறனோ. நீ மிச்சம் நல்லவன்போலை கிடக்கு. உன்ரை பேரென்ன?

**வேலு :** ... வேலு ...

**சுந்த :** வேலு! அச்சாப்பேர் வேலு. மாமா இல்லாத நேரந்தான் எல்லாம் கேட்க வேணும். எப்பிடிப் பின்னை மாமாவின் மகள் கறுப்பியா? சிவப்பியா?

**வேலு :** கறுப்பு ... (தலையைச் சொறிந்தபடி)

**சுந்த :** (வசனம் முடியமுன் அவதிப்பட்டு) ஆ! கறுப்போ? என்ன காகம்மாதிரிக் கறுப்போ? இல்லாட்டி நல்லெண்ணைக் கறுப்போ?

**வேலு :** கறுப்பு இல்லை ஐயா.

**சுந்த :** அப்பிடியே! நான் ஏதோ கறுப்பெண்டாப்போலை பயந்துபோனன்.

**மூர்த் :** அவ குண்டா? இல்லை ஒல்லியா?

**வேலு :** உருளைமாதிரிக் குண்டு...

**மூர்த் :** ஆ! ... அப்போ குண்டுதானா!

**வேலு :** உருளைமாதிரிக் குண்டு இல்லை ஐயா.

**சுந்த :** முகம் எப்பிடியடா?

**வேலு :** உங்களுக்குப்போலை சப்பையா, சொத்திப் பல்லுகளோடை இல்லை ஐயா. நல்ல வட்ட முகம்.

**மூர்த் :** அவவுக்கு என்னைப் பிடிக்குமோ!

**வேலு :** (குழைந்து நெழிந்து) நான் அவவெண்டா உங்கடை அழகிலை சொக்கிவிடமாட்டேனா? உங்களுக்கு உந்த உள்வளைவு முதுகும், குழிவிழுந்த கண்ணும், ஊமல் சொண்டும் இல்லாவிட்டால் நீங்க ஒரு மன்மதன்தான் ஐயா.

**சுந்த :** அது பழக்குகிறது என்வேலை. ஒவ்வொரு நாளும் இங்கிலீசுப் படத்துக்குப் போனு சுகமாய் பழகலாம்.

**மூர்த் :** இவ டிறைவ் (Drive) பண்ணுவவா?

**வேலு :** அதென்னையா டிறைவ்?

**மூர்த் :** அதாவது ஓடுவது.

**வேலு :** ஏன்? உங்களுக்கு ஓடுகிற ஆளா பிடிக்கும். அவ சுமாரா ஓடுவா.

**மூர்த் :** அவ பாரிஸ் போயிருக்கிருவா?

**வேலு :** இல்லையே.

**மூர்த் :** அந்த நாட்டுக்குப் போகாத பெண்ணும் ஒரு பெண்ணு? நேக்கட் டான்ஸ், அந்த டான்ஸ் இந்த டான்ஸ் எண்டு எத்தினை டான்ஸ்சுகள் அங்கை இருக்கு.

**வேலு :** நீங்க கலியாணம் செய்தபிறகு பாரிஸ் என்ன அமெரிக்காவுக்கே கூட்டிப் போங்கோவேன். பணம் வைச்சிருக்கிறியள் தானே.

**மூர்த் :** பணமா? பணம் இருந்தா சுப்பிரமணியத்தின்ரை வீட்டை வருவோமா? அவர் தாற சீதனத்திலைதானே இந்த உலகத்தையே சுத்திப்பாக்கத் திட்டம்போட்டிருக்கிறேன்.

**வேலு :** ஆமாம். இந்த நாளையிலை மாப்பிளைமார் சுதிபண்ணுறது பெண்சாதியின்ரை சீதனத்திலைதானே. அவவின்ரை போட்டோ பாக்கப்போறியளே.

**சுந்த :** எங்கே? எங்கே?

**வேலு :** (எடுத்துவந்து) இந்தா ஐயா.

[இருவரும் பார்ப்பதற்கு இடிபடுகிறார்கள்]

**இருவ :** ஆகா! ஆகா!;

**வேலு :** போட்டோவையே உடைச்சிடுவியள் போலை கிடக்கு. அவவுக்குச் சேரவேண்டிய வயல் புலம் எல்லாம் வீட்டுக்குப் பின்னாலை பெரிய வெளியாய்க் கிடக்கு. பாக்கில் பாருங்கோ ஐயா.

**மூர்த் :** சரி பாப்போம்.

**வேலு :** அப்ப இந்தப் பக்கத்தாலை போங்கோ. (போகிறார்கள்) வடக்குப் பக்கம் அதிகம் போகாதையுங்கோ. அதிலை ஒரு புளிய மரத்திலை ...

**சுந்த :** (பதறியபடி) புளியமரத்திலை ...

**வேலு :** கொள்ளிவால் பேய் ...

**சுந்த :** (பயந்து நடுங்கி) ஆ! பேயா?

**வேலு :** ஐம்பது வருஷத்துக்கு முந்தி வந்ததாய்க் கூறினாங்கள் ஐயா. சரி சரி போய்ப் பாருங்கோ.

— தொடரும்


தம்பி தங்கைகளே!

# "நீலமலர்"

கா. தமிழ்த்தம்பி எழுதும்

இனிய தொடர் நவீனம், திடுக்கிடும் நிகழ்ச்சிகளடங்கிய சிறந்த படைப்பு

## வெற்றிமணியில்

**15-3-69ல் தொடங்குகிறது.**

உங்கள் பிரதிகளுக்கு முந்துங்கள்.

தொடர்ச்சி-

# தன்னிகரில்லாத் தாவரங்கள் 4

த. அரியரத்தினம், B. Sc. (Dip-in-Ed)

நீங்கள் உண்ணும் உணவுகள் உங்கள் உடம்பின் பல்வேறு பகுதிகளுக்குச் சென்று சக்தியும் வெப்பமும் தருகின்றன என்று படித்திருக்கின்றீர்களா? எப்படி அவை போகின்றன? நீங்கள் உண்ணும் உணவு உணவுக்குழாயின் பல்வேறு பகுதிகளில் சமிபாடடைந்து சிறுகுடல் என்னும் பகுதியில் உள்ள சடைமுளைகள் என்ற பகுதியாற் குருதிக்கு அனுப்பப்படுகின்றன. (இந்த உணவுக்குழாயின் படத்தை உங்கள் பொதுவிஞ்ஞானப் புத்தகத்தில் பார்க்கவும்) பின்னர் குருதி இந்த உணவுச் சத்தை பல்வேறு பகுதிகளுக்குக் கொண்டுபோகின்றது என்பதுதான் உங்களுக்குத் தெரியுமே. அப்படியானல், தாவரங்களிற் குருதியில்லை. அங்கு எவ்வாறு இலைகளினால் தயாரிக்கப்படும் உணவும், வேரால் உறிஞ்சப்படும் நீரும் தாவரத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் போகின்றன? அங்கு நீர்தான் இந்த உதவியைச் செய்கின்றது. வேரிலிருந்து இலைகள்வரை உறிஞ்சப்பட்ட நீர் ஒரு நிரலாக முடிவின்றி இருப்பதாகத் தாவரவியல் வல்லுனர்கள் கண்டுபிடித்துள்ளார்கள். இலைகளிலிருந்து இலைவாய் மூலமாக நீர் ஆவியாகி வெளியேறுமாம். அவ்விதம் ஆவியாகப் போன இடத்துக்கு நீர் செல்ல நிரல் உயர்ந்துகொண்டு வருமாம். இந்தத் தத்துவத்தை டிக்சன் என்ற ஆங்கில விஞ்ஞானி விளக்கியுள்ளார். இலைகளிலிருந்து நீர் ஆவியாகப் போவதைப் பார்த்திருக்கிறீர்களா? இல்லாவிட்டால் வாருங்கள் இந்தப் பரிசோதனையைச் செய்வோம்!

ஒரு செடியிலிருந்து ஒரு கிளையைப் பிடுங்கிப் போத்தலால் மூடி வெய்யிலில் வைக்கிறோம். சில மணி நேரம் விளையாடிவிட்டு மீண்டும் சென்று பார்க்கின்றோம். போத்தலின் உட்புறத்தில் நீர்த்துளிகள் இருக்கின்றனவே! இவை எங்கிருந்து வந்தன? ஆம். கிளையிலுள்ள இலைகளிலிருந்து நீர் ஆவியாக இலைவாய்களால் வெளிவந்து போத்தலின் குளிர்ந்த பகுதியில் நீர்த் துளிகளாக மாறிவிட்டன. இதை ஆவியுயிர்ப்பு என்று விஞ்ஞானிகள் சொல்வார்கள். இந்த விதமாக நீர்மேலே போகும்போது உறிஞ்சப்பட்ட கனியுப்புகளும் தாவரத்தின் மற்றைய பகுதிக்குச் செல்கின்றன. இலையில் ஆக்கப்பட்ட உணவு கீழ்ப் பகுதிக்குக் கொண்டுவரப்படுவதற்குச் சரியான விளக்கம் இன்னும் தெளிவாக்கப்படவில்லை. ஆனாலும் இது பற்றிய தத்துவங்களை மேல்வகுப்புகளில் அறிந்துகொள்வீர்கள்.

குழந்தைகளே! நீங்கள் உண்ணும் ஆகாரத்தைப்பற்றிச் சிறிது சிந்தித்துப்பாருங்கள். காலையில் மாவினால் செய்த பலகாரங்கள், மத்தியானம் சோறு, இரவு பாண் என்று பொதுப்படையாக வைத்துக்கொள்வோம். சோறு அரிசியிலிருந்து மா, அரிசி, கோதுமை, குரக்கன்

போன்றவற்றிலிருந்தும் பெற்றுக்கொள்கின்றோம். இந்த உணவை கடையில் வாங்குவது அப்பா, சமைப்பது அம்மாவாக இருக்கலாம். ஆனால், அதைப் பெருமளவிற் கிடைக்கச் செய்வதற்கு யார் காரணம்? ஆம்! தாவரங்கள்தான் காரணம். சரி. இனிக் கறிகளைப் பற்றிப் பார்ப்போம். முருங்கை, கீரை, பருப்பு, கிழங்கு அடிக்கடி நாம் சமைக்கும் கறிகள். இவையெல்லாம் தாவரங்கள் என்பது சொல்லாமலே விளங்கும். உங்களில் சிலர் சைவ உணவே உண்ண மாட்டீர்கள். ''புலால்தான் உண்ணுவோம். எங்களுக்குத் தாவரங்களே தேவையில்லை'' என்று சொல்லலாம். அப்படி நீங்கள் சொன்னால் அது பிழை. புலால் உணவாக மீன், முட்டை, இறைச்சி வகைகளைத்தானே உண்பீர்கள். கடலில் வாழும் பெரிய மீன்கள் சின்ன மீன்களை உண்ணும். சின்ன மீன்கள் தங்களிலும் சிறிய மீன்களை உண்ணும். இந்தச் சிறிய மீன்கள் பாசி, சாதாளை, கயற்றம் என்று சொல்லப்படும் கடல் வாழ் தாவரங்களைத்தான் உணவாக உட்கொள்ளுகின்றன. இந்தத் தாவரங்கள் இல்லாவிட்டால் சிறிய மீன்களோ அவற்றை உண்டு கொழுக்கும் பெரிய மீன்களோ அவற்றை உண்டு கொழுக்கும் நீங்களோ இருக்கமுடியாது. பார்த்தீர்களா? எப்படிப் பார்க்கினும் எங்கோ ஓர் இடத்தில் தாவரம் இல்லாமல் வாழமுடியாது. ஆட்டிறைச்சி, கோழிஇறைச்சி என்றாற்கூட இது தான். ஆடு இலை, குழைகளைத் தின்னும். கோழி தானியங்களைத் தின்னும். எனவே, இவைகளை நாம் உண்பதால் அவைமூலம் தாவர உணவை உண்பவர்கள் ஆகின்றோம். இதைத்தான் உணவுச் சங்கிலி என்று சொல்வார்கள். பார்த்தீர்களா? தாவரங்கள் இல்லையென்றால் யாம் உயிர்வாழவே முடியாது! 'சோயாபீன்ஸ்' என்னும் ஒரு அவரையை மாவாக்கி அதில் இறைச்சி செய்யலாம் என்று கண்டு பிடித்துள்ளார்கள்.

நாம் உண்ணும் உணவைப் பல வகையாகப் பிரிக்கலாம். அவை யாவன: காபோகைதரேற்று, புரதம், கொழுப்பும் எண்ணெயும், கனியுப்புகள், உயிர்ச்சத்து, நீர் என்பன ஆகும். காபோகைதரேற்றில் இரண்டு வகையுண்டு. ஒன்று மாப்பொருள்; மற்றது வெல்லப் பொருள். மாப்பொருளை அரிசி, கிழங்கு ஆகியவற்றிலிருந்து பெறலாம். வெல்லப் பொருளை கரும்பு, முந்திரி, பீற்றூட் ஆகியவற்றிலிருந்து பெறலாம். எண்ணெயை எள்ளு, தேங்காய், பழவிதைகள் போன்றவற்றிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். கல்சியம், அயடீன், பொசுபரசு, இரும்பு, உப்புக்கள் போன்றவை கனியுப்புக்களாகும். முருங்கை இலையில் ஏராளமாகக் கல்சியம் உண்டு. பழங்களில் பொசுபரசு உண்டு. பொன்னாங்காணி போன்ற கீரைவகையில் இரும்பு உண்டு. இந்தக் கனிகளின்மூலமே நாம் இவற்றைப் பெற்றுக்கொள்ளுகின்றோம். உயிர்ச் சத்துக்களிற் பலவகையுண்டு. அவற்றையே A; B; C; D; E; K; என்று பெயரிட்டு அழைக்கிறார்கள். உயிர்ச்சத்து A கீரைவகைகளில் உண்டு. உயிர்ச்சத்து B தவிடு நீக்காத அரிசியில் உண்டு. உயிர்ச்சத்து C பழங்களில் உண்டு. உயிர்ச்

சத்து D நமது தோலிலேயே சூரிய வெளிச்சத்தின் உதவியால் உண்டாகின்றது. பார்த்தீர்களா! எத்தனை வகையான உணவுகளை உண்டாலும் அத்தனை வகைகளையும் தாவரங்களிலேயே இருந்து பெற்றுக்கொள்ளலாம். புலால் உணவில் இருந்தும் பெறலாம். ஆனால் அவை எங்கோ ஒரு முறை தாவரங்களைத் தானே தம் உணவாகப் பெற்றவை. ஆகவே; தன்னிகரில்லாத் தாவரங்கள் என்று சொல்வதில் தவறேதும் உண்டா? அதோ! நீங்கள் இல்லை இல்லை என்று கத்தும் சத்தம் கேட்கிறது. மீண்டும் சந்திக்கும்வரை உங்கள் சார்பில் தாவரங்களுக்கு என்வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

> பொங்கல் மலரில் வெளியான மூளைக்கு வேலை என்பதன் விடை :
>
> **என் வயது 12**

# பல முதன்மைகள்

கு. துரைநாயகம், வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை.

சந்திரனை வலம்வந்த 'அப்பலோ 8' என்ற அமெரிக்க விண்வெளிக் கப்பல் சந்திரமண்டல ஆராய்ச்சியில் ஆறு முதன்மைகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியுமா?

1. மனிதர்கள் இதுவரை சென்றிராத அதிகபட்ச வேகத்தில் அதாவது மணிக்கு 24,171 மைல் வேகத்தில் விண்வெளி வீரர்கள் பிரயாணம் செய்திருக்கிறார்கள்.

2. மனிதர்கள் இதுவரை சென்றிராத உயரத்துக்கு அதாவது 282,33,000 மைல்களுக்கு விண்வெளி வீரர்கள் சென்று திரும்பியிருக்கிறார்கள்.

3. முதன்முறையாக சந்திரனை மனிதர்கள் சுற்றியுள்ளனர்.

4. பூமியின் ஈர்ப்பு விசையிலிருந்து விண்வெளி வீரர்கள் விடுபட்டுள்ளனர்.

5. சந்திரனின் ஈர்ப்பு விசையில் முதன்முறையாக மனிதர்கள் சென்றுள்ளார்கள்.

6. சந்திரனின் இருண்ட பாகத்தில் செல்லும் வாய்ப்பு முதன்முறையாக மனிதர்களுக்குக் கிடைத்துள்ளது.

# காலந் தவறுமை (39)

— மு. க. சுப்பிரமணியம் —


துரை எட்டாந்தரத்திற் படிக்கும் மாணவன். அவன் நேரத்துக்கு எழும்புவதோ பாடசாலைக்குச் செல்வதோ கிடையாது. வகுப்பிற் கொடுக்கப்படும் பயிற்சிகளையும் காலம் தாழ்த்தியே செய்வான். குறிப்பிட்ட நேரத்திற்குள் எதையும் செய்யமாட்டான்.

காலையிலே துரையின் அம்மா பலமுறை ''துரை எழும்பு'' என்று சத்தமிட்டாலும் ''பொறுங்கோ அம்மா எழும்புகிறேன் நேரமிருக்கு'' என்பான். வகுப்பில் ஏதாவது ஒன்றைச் செய்யும்படி ஆசிரியர் சொன்னால் கடைசியாகச் செய்வதும் துரைதான். எதையும் நேரத்துக்குள் செய்து முடியாதபடியால் பல நன்மைகளையும் அவன் இழக்கவேண்டியிருந்தது.

மோகன் அப்பாடசாலையில் படிப்பை முடித்தபின் இங்கிலாந்துக்குச் சென்று விமானம் ஓட்டப் பயிற்சிபெற்றுத் தன் ஊருக்குத் திரும்பிய மறுதினம் தான் படித்த பாடசாலைக்கு வந்தான். அவனைக் கண்டதும் மோகன் வா! என்று ஆசிரியர்களும் மாணவர்களும் வரவேற்றனர். ''மோகன் நீ விமானம் ஓட்டுவதை நாங்கள் பார்க்கவேண்டும்'' என ஆசிரியர்களும் மாணவர்களும் ஒரே குரலில் கேட்டனர். மோகன் ''விமானம் ஓட்டுவதை உங்களுக்குக் காட்டுவது மாத்திரமல்ல, உங்களை விமானத்தில் ஏற்றிச் செல்லவும் எண்ணியுள்ளேன்'' என்றான். அவர்களுக்கு இருந்த ஆனந்தம் கூறமுடியாது. மறுதினம் காலை சரியாக 9 மணிக்கு விமானம் புறப்படும் என்றும் நிலையத்துக்கு ஏழாம் எட்டாம் வகுப்பு மாணவர்களும் ஆசிரியர்களும் வரவேண்டும் எனவும் கூறி மோகன் சென்றான்.

மறுநாள் குறித்த நேரத்துக்கு முன்பே எல்லா ஆசிரியர்களும் மாணவர்களும் விமான நிலயத்தை அடைந்தனர். ஆனல் துரை மாத்திரம் அங்கே இல்லை. காலை ஏழுமணிக்கே துரையின் தாய் அவனை எழுப்பப்பட்ட பாடு - ''ஆம் அம்மா இன்று விமானத்தில் தொழும்பு செல்லவேண்டும்'' என்று கூறியபடி எழுந்தான். ஆனல் அவன் அதன்பின் செய்யவேண்டியவற்றை வழமைபோல் ஆறுதலாகவே செய்து புறப்பட்டான். விமான நிலயம் துரையின் வீட்டிலிருந்து ஒரேஒரு மைல்தான். அங்கே சென்றபொழுது விமானம் தரையைவிட்டுக் கிழம்புவதைக் கண்டான். மாணவர்கள் கைகளை அசைத்து விமானத்தில் வந்து ஏறு என்று ஏளனஞ் செய்தனர். துரை மிகுந்த கவலையுடன் வீடுதிரும்பினன். தாயார் ''எதையும் நேரத்துக்குச் செய்யாததால் வரும் தீமைகளைப்பற்றி அவனுக்குக் கூறினள்.

சிலநாட்களுள் துரை புதியவனுகிவிட்டான். எதையும் சீக்கிரம் செய்துமுடிக்கப் பழகிவிட்டான். வகுப்பில் முதலில் கொண்டு சென்று காட்டுவது துரைதான். ஆசிரியர்கள் ஆச்சரியப்பட்டனர். ஏன் வீட்டிலேகூட துரை அதிகாலை எழுந்து தாயாரையும் மற்றவர்களையும் எழுப்பத் தொடங்கிவிட்டான்.




## வாழ்வு சிறக்க!

— செல்வி இராஜேஸ்வரி ஆறுமுகம், மிருசுவில். —

மாணவப் பருவத்தில் ஒருவருக்கு ஏற்படும் ஆசை அபிலாசைகள், கனவுகள்தான் அவரது எதிர்கால வளமான வாழ்வுக்கு வித்திடுகிறது என்பதனைப் பெரியோர்களின் வாழ்க்கை வரலாற்றைக்கொண்டு நாம் அறிய முடிகிறது. 'வளரும் பயிரை முளையில் தெரியும்' எனும் பொன்மொழி யும் இதனை எடுத்தியம்புகிறது.

வாழ்க்கை வாழ்வதற்கே என்றால் எப்படி வேண்டு மானாலும் வாழலாம் என்று அர்த்தமல்ல! வையத்துள் வாழ்வாங்கு வாழவேண்டும்...நேரிய சிறந்த வாழ்வு வாழ வேண்டும். அதுவே அழகு! அதுவே சிறந்த வாழ்க்கை!!

இந்த உலகம் இருக்கிறதே... அது எவ்வளவு விசித்திர மானது! இதில் வதியும் மக்களும் வெவ்வேறு குணவியல்பு கொண்டவராய் உள்ளனர். மனிதர்களுக்குள்தான் எத் தனை எத்தனை வேற்றுமைகள். அவர்கள் உள்ளத்தில்தான் எத்தனை எத்தனை ஆசைகள். இந்த ஆசைகள் நிறைவேற வேண்டுமென்பதற்காக எப்படியெப்படியோ மனிதர்கள் வாழ்கிறார்கள். சிலரோ வாழ்க்கை நெறிகள் வகுத்து அதன்படி இலட்சிய வாழ்வு வாழ்கின்றனர். இன்னும் சிலரோ பிறந்தேன்; வளர்ந்தேன்; மறைந்தேன் என்ற ரீதியில் வாழ்கின்றனர். மற்றும் சிலரோ அடுத்தவர் வாழ்வை ஆராய்ந்து குற்றம் குறை காண்பதே வாழ்க்கை யென வாழ்கின்றனர். மனிதராகப் பிறந்ததினால் மட்டும் மனிதராகிவிட முடியுமா என்ன? குணத்தால் உயர்ந்து கொள்கையிற் சிறந்து விளங்குபவர்கள்தான் மனிதர்கள். இவர்கள் உலகத்தின் முன் நல்லவராக வாழவேண்டுமென்

பதற்காக மனச்சாட்சிக்கு விரோதமாக நியாயமற்ற செயலைச் செய்யார்கள்.

இவ்வாறுதான் நாமும் வாழவேண்டும். 'ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையாது' எனப் பெரியோர்கள் சொல்வார்கள். மாணவப் பருவத்திலேயே நாம் நேரிய சிறந்த வாழ்வு வாழ நம் மனதிற்குப் பயிற்சியளிக்க வேண்டும். இந்தப் பயிற்சிதான் நம்மை வாழ்க்கைப் போராட்டத்தில் தோல்வியடைய விடாது வெற்றிப் பாதையிற் செல்ல வழிகாட்டும். 'வாழ்க்கையில் நான் பின்வாங்கப் போவதில்லை. இதுவே என் இலட்சியம்' என்ற எண்ணம் நம் மனதில் ஒளி வீசிக்கொண்டிருக்கவேண்டும். இந்த ஒளியை நம் மனதில் என்றும் அணையவிடக் கூடாது. அது மட்டுமன்றி;

இளமையில் கற்க கசடறக் கற்கவும் கற்றதன்படியே ஒழுகவும் வேண்டும். ஏட்டிற் படித்ததோடு நாம் நின்று விட்டால் அந்தக் கல்வியால் நமக்கு எத்தகைய பயனும் விளையவில்லை எனத் துணிந்து கூறலாம் அல்லவா? வெறும் புத்தகப் பூச்சியாக நாம் வாழ்வதால் என்ன பயன்? நாம் பெற்ற அறிவு வளர்ச்சி துன்பத்தை வெல்லும் திறத்தையும் நமக்களித்திருக்கவேண்டும்.

பெரியவர்களின் சொற்கேட்டு நற்பண்புகளை நல்ல பழக்க வழக்கங்களை மேற்கொண்டு நாம் வாழவேண்டும். நம் தாய்மொழியை, நம் நாட்டின் கலை, கலாச்சாரம், பண்பாட்டினை யெல்லாம் நாம் எக் காரணங்கொண்டும் புறக்கணிக்கக் கூடாது. நாட்டுப் பற்றும் நம் உள்ளத்தில் நிறைந்திருக்வேண்டும்.

சோம்பலைக் கொல்லும் திறன்பெற்றுத் தன்மானமில்லாக் கோழைகளோடு கூட்டுச்சேர்வதையும் தவிர்க்க வேண்டும். விளையாட்டாக, வேடிக்கையாக வம்புச் சண்டைகள் புரிந்து பிறரது வயிற்றெரிச்சலை நாம் வலியப் பெறக்கூடாது. நல்லவர்கள் நம்மைத் தூற்றும்படி வாழாது போற்றும்படி வாழவேண்டும். ''பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும் நற்றவ வானிலும் நனி சிறந்தனவே'' என்றார் அமரகவி பாரதி. நம்மால் பெற்ற தாயின் புக

ழும், பிறந்த மண்ணின் புகழும் மேலோங்கவேண்டும் என்ற எண்ணம் நம் மனதில் ஆழப் பதிந்திருந்தால் வீடு மட்டுமல்ல, நாடும் சிறக்கும். நல்ல எண்ணம்தான் நல மான வாழ்வை அளிக்க வல்லது.

வீடும் நாடும் சிறக்கவேண்டுமெனில் பொருளாதார வளர்ச்சி ஓங்கவேண்டும். இதற்கு உண்மையான உழைப்பு அவசியம் அல்லவா? எத் தொழிலும் உயர் தொழிலே. தொழிலில் எத்தகைய உயர்வு தாழ்வும் இல்லை. செய்யும் தொழிலைத் தெய்வமாக நினைத்து உண்மையாய்ப் பாடு பட்டு உழைத்தால் உற்பத்தியோடு பொருளாதாரமும் பெருகும். நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உழைப்பே முக்கியம். சிறியவர்களும் தம்மால் இயன்ற அளவுக்குச் சின்னச் சின்ன வேலைகளைக் கருத்தாய்ச் செய்யப்பழகும் போது பிற்கால வாழ்வுக்கு இப்போதே பயிற்சி பெற்றது போல் ஆகிறது. வீட்டில் உள்ள பெரியோர்களுக்கும் உதவி செய்வதுபோலாகிறது. இளமையில் நாம் பெற்ற பயிற்சி கள்தான் வருங்கால வாழ்வு சிறக்க வழிகாட்ட முடியும்!

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்''

# போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து!

- க. கதிர்காமநாதன், ம. ம. வித்தியாலயம், வசாவிளான் -

நாம் நமது வாழ்க்கையிலிருந்து பெறும் அறிவு அனு பவ அறிவெனப்படும். நூலறிவைவிட அனுபவ அறிவே சிறந்தது. நம் முன்னோர்கள் பண்பட்ட நெறியிலே வாழ்வு நடாத்தியவர்கள். அவர்களது பழுத்த வாழ்விலிருந்து பிறந்து தொன்றுதொட்டு வழங்கிவரும் மொழிகளே பழ மொழிகள். அவைகள் அறிவுறுத்தும் அரிய கருத்துக்கள் நாம் நல்வாழ்வு வாழத் துணைசெய்வன. நாம் அனைவரும் நல்வாழ்வு வாழவும், இன்பமாக இருக்கவுமே விரும்புகின் றோம். விரும்பி இடையறாது முயல்கின்றோம். ஆனல் நம் மில் மிகச் சிலரே இன்பத்தை அடைகின்றனர். காரணம்

என்ன? இன்பத்துக்குரிய காரணம் புறத்திலன்றி நம் அகத்திலேயே இருப்பதுதான். இன்பத்துக்குரிய காரணத்தை அகத்தே பெற்றவர்கள் இன்பவாழ்வு நடாத்துகின்ருர்கள்.

''பொருளிலார்க்கு இவ்வுலகமில்லை'' என்று கருதும் பலர் பொருள் தேடுவதிலேயே வாழ்நாள் முழுவதையுஞ் செலவிடுகின்ருர்கள். இரவு பகலாகக் கணவனும் மனைவியும் பிள்ளைகளுமாக எண்ணித் திட்டமிடுகின்ருர்கள். உணவையும், உடையையும், உறக்கத்தையும் சுருக்கிப் பணத்தையே உயிரென மதித்துப் பாடுபடுகின்ருர்கள். தாம் தேடிய செல்வத்தைக் கண்ணும் கருத்துமாகக் காக்கின்ருர்கள். தகுந்த வழிகளில் தக்க மூலதனத்தையிட்டு வட்டிகள் குட்டி போர்டும்வண்ணம் தாம் கருதிய பெருந்தொகைப் பொருள் சேருமளவும் சேர்த்துக்கொண்டே இருப்பார்கள். முதுமை வந்ததென்றும் ஓயமாட்டார்கள். அந்தோ! அவர்கள் தாம் கருதித் தேடிய பொருள் இன்பத்தைப் பெற்ருருமல்லர். பிறர் அநுபவித்தாருமல்லர். பல்லாண்டு வாழ்ந்து பலரின் முன்னே வட்டிக்காரன் என்னும் பெயரைக்கேட்டு நான்கு பத்து அடைவைப்பிடித்து, பலவாறு உழன்று பயனற்ற வாழ்வு கண்டாரன்றி, தமக்கும் பிறர்க்கும் ஒரு பயன் கண்டாரல்லர்!

''உண்ணுன் ஒளிகிருன் ஓங்குபுகழ செய்யான்
துன்னருங் கேளிர் துயர்களையான் — கொன்னே
வழங்கான் பொருள் காத்திருப்பானேல் ஆ
இழந்தா னென் றெண்ணப்படும்''

என்ற நாலடிப் பாட்டினுலே மன நிறைவற்றவன் செல்வனுயினும் விரைவில் இழப்பானென்பது தெளிவாகிறது. மனநிறைவற்று ஈயாது தேடுபவனின் செல்வத்தைக் கள்வர் கவர்ந்துசெல்ல முயல்வர். இவ்வாறு தேடிய பொருளை அநுபவியாது இழப்பவன் தேனீபோலத் துயருறுவான். அந்தோ! பிறர் கவர்ந்தநுபவிப்பதற்காகப் பொருள் தேடுபவரின் மதி என்னே?

மக்களுக்கு மனநிறைவு உண்டாமைக்குரிய காரணம் யாது? எல்லா நிறைவுமிருந்தும் மனநிறைவொன்றில்லாமையன்ருே மனிதன் வாழ்வு பாழாகின்றது. ஒருவனது மன நிறைவைக் குலைப்பது அவன் தன் நிலையையும் பிறர் நிலை

யையும் ஒப்புநோக்கும் இயல்பே. செல்வத்தின் இச்சை யுடையவன் பெரும் செல்வனையே மதித்து அவன்போலா வதற்கு அல்லும் பகலும் கனவு காண்கிருன். புகழில் விருப் புடையோன் ஒரு பெரும் புகழாளனைத் தன் இலட்சிய புருடனாகக் கருதுகிருன். கல்வியில் நாட்டமுடையவன் தான் மதிக்கும் கற்றான்போல உயரக் கற்பனைசெய்கிருன். இவ்வித ஒப்புநோக்கு உயர்த்த வல்லதே. ஆயினும், செல் வர்க்கு உகந்ததன்று. ஏன்? செல்வத்திற்கு எல்லையில்லை. செல்வம் முற்றவத்தான் வருவது, முயற்சியால் மாத்திரம் வருவதன்று என அறநூல்கள் கூறுகின்றன. அறிஞர்கள் அவ் வுண்மையை மனத்துள்கொண்டு உள்ள பொரு ளோடு உள்ள நிறைவு பெற்றிருப்பர்.

''தம்மின் மெலியாரை நோக்கித் தமதுடமை
அம்மா பெரிதென் றகமகிழ்க — தம்மினும்
கற்ருரைநோக்கிக் கருத்தழிக கற்ற தெல்லாம்
எற்றே இவர்க்கு நாம் என்று''

என்றது ஆன்ருேர் வாக்கு. தேடியசெல்வம் போதுமென்ற மனநிறைவு வேண்டும். ஆனல் கற்ற கல்வியில் போதாது மனக்குறைவேண்டும். செல்வம் பெருகுந்தோறும் அதனு ளாம் இன்பமும் நிறையும். அதனுற்தான் பொருள்நிலையில் போதுமென்ற மனநிறைவு இன்றியமையாதென நம் ஆன் ருேர் கண்டனர்.

மனிதனுக்கு அறமும் இன்பமுமே வாழ்க்கையில் அடை யும் பயன். பொருளன்று. பொருளானது அறத்தையும் அடைய ஏதுவான கருவியாகும். இதையறியாதவர் பொருளை மாத்திரம் தேடி அறத்தையும் இன்பத்தையும் கைவிடுகின்றனர். பொருளாசை பிடித்த ஒருவன் தான் தொட்டதெல்லாம் பொன்னுக வேண்டும் என்று வரம் பெற்ருன். அதன் பயனுக அவன் தொட்ட உணவு யாவும் பொன்னுகியது. அதனுல் உணவின்றி வருந்தினுன். உடை பொன்னுகியது. மானமிழந்தான். அவன் பொன்னுசை தன் னுயிர்க்கே பொல்லாததெனக் கண்டான். மீண்டும் கட வுளை இரந்து மன நிறைவொன்றையே வேண்டி மகிழ்வுற் ருன். அவனைப்போன்ற ஆசைப்பேய் பிடித்தோர் இன்று பலருளர். போதுமென்ற மனநிறைவுடையவன் பொரு

ளாசை இல்லான் என்பது மாத்திரமன்றி பொருமையுமில்லன். அவன் யாரிடத்தும் அழுக்காறு கொள்ளான். ஆனுல் அனுதாபம் உள்ளான். தன் நலம் பாராது மன்னுயிரனைத்தையும் ஓம்புவான். மன்னுயிர் ஓம்புவோர்க்குத் துன்பமில்லையல்லவா? மன நிறைவுடையவன் ஒருவனே அறம், பொருள், இன்பம் மூன்றையும் உடையவன். ஆகவே எல்லோரும் மக்களாக வாழவேண்டுமானுல் மனநிறைவையே தேடவேண்டும்; அதனையே போற்றி வளர்க்க வேண்டும்.

''செல்வமென்பது சிந்தையின் நிறைவே''

## தைப் பொங்கல்

— ஆ. பூங்குன்றனுர், வித்தியானந்தக் கல்லூரி, முள்ளியவளை. —

தைப் பொங்கல் உழவர்கள் சூரியனுக்கு நன்றி செலுத்தும் நாள். நெல், சாமை, தினை, குரக்கன் முதலிய பயிர்களை உழவர்கள் வயல்களில் பயிரிடுகிருர்கள்; அப் பயிர்களை வளரச் செய்த சூரியனுக்குப் பொங்கலிட்டுப் படைக்கிருர்கள்.

சூரியன் உதிப்பதற்கு முன்பே ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் எழுந்துவிடுவார்கள். வீட்டு வாயிலிலே முற்றத்தில் சாணத்தால் மெழுகுவார்கள். அதில் மாக் கோலமிட்டு நிறைகுடம் வைப்பார்கள். தோரணங்கள் கட்டுவார்கள். பிள்ளையார் பிடித்து வைத்து அறுகம் புல்லும் பூக்களும் சூட்டுவார்கள். அதிகாலையிலேயே அனைவரும் குளித்துப் புத்தாடை அணிந்துகொள்வர். வெடி கொளுத்துவதிலே சிறுவர்கள் ஆவலாய் இருப்பார்கள். பல பக்கங்களிலிருந்தும் வெடிச்சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கும். தங்கள் நண்பர்களிடமிருந்து வந்த பொங்கல் வாழ்த்துக்களை ஒருவர் மற்றவருக்குக் காட்டி மகிழ்வர்.

கோலமிட்ட இடத்திலே அடுப்பு மூட்டிப் புதுப்பானையிலே மாவிலைகட்டி உலை ஏற்றுவர். பானையிலே கருப்பஞ் சாறு, சர்க்கரைப்பாகு, பால் முதலியன விட்டு அரிசி,

பழம், பயறு முதனலிய போட்டுப் பொங்கலிடுவர். பொங்கலைத் தலைவாழையிலையிலே படைத்துச் சூரியனை வணங்குவர். அதன்பின் அனைவரும் சேர்ந்து உண்டு மகிழ்வர்.

தைப் பொங்கலுக்கு அடுத்த நாள் மாட்டுப் பொங்கல். மாடுகளைக் குளிப்பாட்டி, பொட்டு வைத்து, மாலை அணிந்து அழகுபடுத்துவார்கள். உழவர்கள் தங்கள் வயல்களிலே உழுது பாடுபட்ட மாடுகளுக்காகப் பொங்கலிட்டு அவைகளுக்கும் படைத்துத் தாமும் உண்டு மகிழ்வார்கள். இரண்டு நாளும் எங்களுக்கு ஒரே கொண்டாட்டம்தான்!

## செல்வத்துட் செல்வம் கல்விச் செல்வம்

வி. நிர்மலாதேவி, அ. த. க. பாடசாலை, கிளிவெட்டி.

அழகுக் குறளில் வள்ளுவன் தரும் அமுதம் ஓர் ஆறு மலையில் உற்பத்தியாகிச் செல்லும்போது தான் செல்லுமிடமெல்லாம் பெருஞ் சோலைகளையும், செந்நெற் கழனிகளையும் உருவாக்கி அளவிடற்கரிய பயனைத் தருகின்றது. அவ்வண்ணமே திருக்குறள் என்னும் தேனாறு திருவள்ளுவன் என்னும் மலையில் உற்பத்தியாகியது. இவ்வற்றாத ஜீவநதி தன்னை அணுகுவோர்க்கெல்லாம் அளவிடற்கரிய பயனை அளித்தது; அளித்துவருகின்றது; அளிக்கப்போகின்றது.

கடுகைத் துளைத்து ஏழ் கடலைப் புகுத்தினாற்போன்று சிறந்த அரும்பெரும் கருத்துக்களை ஈரடிக் குறள்களுள் புகுத்தி எக்காலத்தினருக்கும், எந்நாட்டினருக்கும் எச்சமயத்தினருக்கும் சம்மதமாய் நின்றிலங்கும் மதித்தற்கரிய மாணிக்கமான திருக்குறளை இயற்றிய திருவள்ளுவரின் ஜெயந்தி தினம் ஆனித் திங்கள் அருந்தினமாகும். ஒப்புயர்வற்ற கருத்துக்களை வைரங்களாகவும், வைடூரியங்களாகவும் கொண்டிலங்கும் திருக்குறள் பாமாலையை அணிந்த தமிழன் இங்கு தாங்கா உவகை கொள்கிறான்.

யாவருக்கும் அறிவுரை அளித்த திருவள்ளுவர் மாணவராகிய எம்மை நோக்கி ஏதும் கூறவில்லையா? கூறியிருக்

கிருர். கன்னித் தமிழில் கல்வியைப்பற்றி கற்கண்டும் கனி ரசமும் நாணிக் கமழும் வண்ணம் காந்தம்போற் கவர்ந் திழுக்கும் கவின்மிகு கருத்துக்களை அளித்துள்ளார். அவற்றை அறியவேண்டியது மாணவராகிய எம் கடமையாகும்.

உயர்ந்த செல்வம் எது?

உலகில் உயர்ந்த செல்வம் எது? பணமா? அறிவா?

பணம் என்பர் சிலர். அறிவென்பர் சிலர்.

''கேடில் விழுச் செல்வம் கல்வி ஒருவர்க்கு
மாடல்ல மற்றயவை''

என நாயனுர் நவில்கின்ருர். கல்வியே அழிவற்ற செல் வம் மற்றவையெல்லாம் செல்வம் அல்ல என்று கூறுகின்ருர். உண்மையில் சிறந்த கல்வி கற்றவனுக்கு மற்றச் செல்வங் களையடைதல் எளிது. பணத்தைப்பெற அவன் தன் அறி வைக் கொண்டு நல்வழியில் முயலலாம். அறிவற்றவன் பண மிருப்பினும் தீய வழியில் செலவு செய்து விடுவான். ஆகவே கற்றவனுக்கு மற்றச் செல்வங்கள் செல்வமல்ல, கல்வியே உண்மையான செல்வம்.

''கேடில் விழுச் செல்வம் கல்வி''

என்று செந்நாப்போதர் செப்புகின்ருர். கல்வி அழி வற்ற செல்வம் என்கின்ருர். கல்வியை நாம் கற்றுவிடின் அதனை எதனுலும் அழிக்க இயலாது. எம்மிடம் இருக்கும் பொருட் செல்வத்தைத் திருடன் திருடலாம். வெள்ளம் கொண்டு செல்லலாம். ஆனுல் ஒருவன் கற்ற கல்வியை எது வும் ஏதும் செய்திட முடியாது. கற்றவனுக்குக் கல்வி உற்ற துணையாய் நின்றுதவும். ஆகவே கல்விச் செல்வம் அழிவற்று எமக்குப் புறக்கண்களிலும் பார்க்க அகக்கண்களே கூடிய பயன் விளைவிக்கின்றன. புறக்கண்களால் நாம் காட்சிகளைக் காணலாம். ஆனுல் அகக் கண்கள்தான் நல்லவை தீயவற் றைப் பகுத்துணர்ந்து நல்வழி காட்டும் சக்திவாய்ந்தவை.

அகக்கண்: ஒருவன் தீய காரியங்களைச் செய்யின் ''கண் கெட்டவன்'' என்று அவனைக் கூறுகின்ருர்கள். ஏன்? பாரதியாரே நல்லவை தீயவையென்று பகுத்துணராது எல்லாவற்றையும் அழிக்கும் கூற்றுவனை கண் கெட்ட காலன் எனக் குறிப்பிடுகின்ருர். பாரதியார். பகர்ந்ததோ

பூவுலகோர் புகழ்வதோ புறக்கண் கெட்டு விட்ட தொன்றல்ல. அகக்கண் கெட்டு விட்டதன்றோ. எனவே இதனின்றும் அகக்கண்களே பயன் அளிக்கும் கண்கள் என்றறிய முடிகிறது. இவ் அகக் கண்களை அளிப்பது கல்வி. எனவே கல்வி அற்றவர் கண் அற்றவர்கள். இதனை,

''கண்ணுடையோர் என்பர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையார் கல்லாதவர்''

என்று பொய்யாப்புலவர் புகழ்கின்றார். எனவே கல்வி கண்ணைப்போன்று மிக அத்தியாவசியமானது.


## தமிழக நேயர்களுக்கு!

**வெற்றிமணி மாதந்தோறும் தமிழகத்திற்கு அனுப்ப ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.**

இந்தியாவிலுள்ள நேயர்கள் வெற்றிமணிக்குரிய சந்தா, மாணவர் மன்றம், பேனு நண்பர் சங்கம் இவற்றிற்குரிய தொகைகளை

கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பவேண்டும்.

தமிழக விற்பனையாளர்களும், விளம்பரதாரர்களும் இவருடன் தொடர்பு கொள்ளவும்.

**கோபாலர் பண்ணை**

3 - 31 - ஏ, மேடக்சு தெரு, சென்னை 7, இந்தியா.


அன்புள்ள மருமக்களே!

பாலர் பகுதிக்கு அனுப்பும் கதை, கட்டுரை, கவிதை யாவற்றையும் உங்கள் ஆசிரியர்களுக்குக் காட்டி வேண்டிய திருத்தங்களைச் செய்தபின் அனுப்பவும்.

மணி மாமா

# வெற்றிமணி மாணவர் மன்றம்

மாணவர் மன்றத்தில் 22 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இருபாலாரும் சேரலாம். பாடசாலேயிற் படிப்பவர்கள் வயதுக் கட்டுப்பாடின்றிச் சேரலாம். விண்ணப்பப் பத்திரம் தேவையானேர் எழுதுக.

**வெற்றிமணி, முள்ளியவளே, இலங்கை.**

## அங்கத்தவர் விண்ணப்பப் பத்திரம்

அன்புள்ள மணி மாமாவுக்கு,

வெற்றிமணி மாணவர் மன்றத்தில் என்னேயும் ஒரு அங்கத்தவராகச் சேர்த்துக்கொள்ளவும். 50 சதம் அனுப்புகின்றேன்.

செல்வன் / செல்வி ..............................

பாடசாலே முகவரி ..............................

வீட்டு முகவரி ..............................

பிறந்த திகதி .............. வயது .............. வகுப்பு ..............

கடிதத்தொடர்பு ஆண், பெண் இருபாலாரும்.

.............................. ..............................

ஆசிரியர் / பெற்ருர் கையொப்பம் கையொப்பம்

# பேனு நண்பர் சங்கம்

உலகத்தின் பலபாகங்களிலு முள்ளவர்களேக் கடிதமூலம் அறிந்துகொள்ளவும், ஒருவர் கஷ்டத்தை மற்றவரிடம் கூறி ஆறுதல் கொள்ளவும், நல்லவர் உறவைப் பெறவும், தங்கள் தங்கள் கருத்துக்களேப் பரிமாறிக்கொள்ளவும் இச்சங்கம் உதவியாக இருக்கும்.

1. சங்கத்தில் சேர விரும்புகிறவர்கள் 50 சதம் அனுப்பவேண்டும்.
2. பெயர், முகவரி, வயது இவற்றைவிட அறிந்த பாஷைகள், விளேயாட்டுக்கள், பொழுதுபோக்குகள், மற்றும் திறமைகள் ஆண், பெண் இருபாலாரும் கடிதம் எழுதலாமா என்ற விபரங்களே 25 சொற்களுக்கு மேற்படாது எழுதி அனுப்பவும்.
3. தோழர் தோழர்களுக்கும், தோழியர் தோழியர்களுக்குமே எழுதலாம். ஆனுல் இருபாலாரும் எழுதலாம் எனக் குறிப்பிடின் எவரும் எழுதலாம்.
4. வயதுக் கட்டுப்பாடின்றி உலகத்தின் எப்பகுதியிலுள்ளவரும் சேரலாம்.
5. தங்கள் புகைப்படங்களே இப்பகுதியில் வெளியிட விரும்புகிறவர்கள் புளக் (block) அனுப்பவேண்டும். புளக் இல்லாவிடில் புளக்செய்ய புகைப்படத்துடன் ரூ. 7-50 அனுப்பவேண்டும்.

இலங்கையில் செய்திப்பத்திரிகையாகப்பதிவுசெய்யப்பட்டதுQ.B.1338

**QUALIFIED OPTICIANS**

*Visit*

# MOHANLAL. C. VASA

No. 207, Second Cross Street,
COLOMBO. 11.

*Telegrams:* **VASAOPTICO** *Telephone:* **2931**

---

கண்களுக்குத் தேவையான

**சகலவிதமான கண்ணாடிகளுக்கும்**

**எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள்**

# மோகன்லால் C. வாசா

இல. 207, இரண்டாங்குறுக்குத் தெரு,
**கொழும்பு. 11.**

தொலைபேசி: 2931

இப்பத்திரிகை சக்தி அச்சகத்தினருக்காக, பொ. இராசரத்தினம் அவர்களால் முள்ளியவளை தண்ணீரூற்றிலுள்ள சக்தி அச்சகத்தில் 15-2-69 சனிக்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.